**செய்தி வெளியீடு எண்:1128** **நாள்:16.11.2021**

# செய்தி வெளியீடு

<u>இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2021, புதுடெல்லி</u>

## மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் இன்று (16.11.2021) இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2021 புதுடெல்லியில் நடைபெறும் தமிழ்நாடு நாள் விழாவைக் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள்.

புதுடெல்லியில் நடைபெறும் 40–வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2021 முன்னிட்டு "லால்சவுக்" அரங்கில் இன்று (16.11.2021) நடைபெற்ற தமிழ்நாடு நாள் விழாவை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள்.

புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில், ஆண்டுதோறும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியானது நவம்பர் 14 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை 14 நாட்கள் நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு (2021) நடைபெறும் 40–வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியினை கடந்த 14.11.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மாண்புமிகு மத்திய வர்த்தகம் மற்றும் தொழில், நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொதுவிநியோகம் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் திரு. பியூஸ்கோயல் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இப்பொருட்காட்சியில் இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்கள், இந்திய யூனியன் பிரதேசங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் பங்கேற்று தங்களது அரசின் வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள், கொள்கைகள் போன்றவற்றை காட்சிப்படுத்தியும், வெளிநாட்டு நிறுவனங்கள் தங்களது நாட்டில் தயாரிக்கப்படும் முக்கியப் பொருட்களை சந்தைப்படுத்தியும் வருகின்றன.

நடப்பாண்டில், இப்பொருட்காட்சிக்கான கருப்பொருள் "சுய சார்பு இந்தியா" (ஆத்ம நிர்பார் பாரத்) – Self Reliant India ஆகும். இதன் மூலம் நம் இந்தியத் திருநாட்டையும், இந்திய மக்களையும் அனைத்திலும் சுய சார்புடையதாகவும் தன்னிறைவுப் பெற்றிடச் செய்வதே இதன் பிரதான நோக்கமாகும்.

தமிழ்நாடு அரசினால் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் செய்தி மக்கள் தொடர்புத் துறை, சுற்றுலாத்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, தொழில் மற்றும் வணிகத்துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், கைத்தறி, கைத்திறன்,

துணிநூல் மற்றும் கதர் துறை, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் போன்ற அரசு மற்றும் அரசுச் சார்புத் துறைகள் பங்கேற்று, தங்கள் துறையின் சாதனைகள், வளர்ச்சித் திட்டங்கள் குறித்தப் புகைப்படங்கள் மற்றும் செயல் விளக்க மாதிரிகளைச் சிறப்பான முறையில் நேரடிக் காட்சியாக பொதுமக்களின் பார்வைக்கு வைத்துள்ளனர்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அரசின் வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள் குறித்தப் புகைப்படங்கள், உற்பத்திப் பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்குக் காட்சிப் படுத்தப் பட்டுள்ளன.

உலக அரங்கில் அனைவரது கவனத்தையும் பெற்று தமிழரின் தொன்மையானப் பண்பாட்டு அடையாளங்களை அள்ளிக் கொடுக்கும் சிவகங்கை மாவட்டம் கீழடி அகழ்வாராய்ச்சி குறித்த மாதிரி வடிவம் மக்களை மிகவும் கவர்ந்து தமிழர்களின் பண்பாட்டையும், வாழ்க்கை முறைகளையும் அறிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

75-வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா (Azadi Ka Amrit Mahotsav) தமிழகத்திலும் சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில், இந்திய விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்தும், இடுக்கண்கள் ஏற்றும் சொல்லொணாத் தொல்லைகட்கு ஆட்பட்டத் தீரத் தியாகிகளின் வீரப் பெருமிதங்களை நினைவுக் கூர்ந்து போற்றும் வகையில் **விடுதலைப் போரில் தமிழகம்** எனும் மகத்தானப் புகைப்படக் கண்காட்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலைய வளாகத்தில் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்ட மாபெரும் புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 01.11.2021 அன்று பொதுமக்களின் பார்வைக்காகத் திறந்து வைத்தார்கள். அதன் அடிப்படையில் இந்த வர்த்தகப் பொருட்காட்சியின் தமிழ்நாடு அரங்கில் விடுதலைப் போரில் ஈடுபட்ட தமிழகத்தைச் சேர்ந்த பெண் தியாகிகளின் புகைப்படங்கள் மற்றும் முக்கியத் தியாகச் சீலர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

இவ்வரங்குகளில், சுதந்திரத்திற்காகப் போராடியத் தமிழ்நாட்டுத் தியாகிகளின் வாழ்க்கை வரலாறுகளை எடுத்துரைக்கும் குறும் படங்கள், அரசு சாதனைகளை விளக்கும் குறும் படங்களும் தொடர்ந்து ஒளி பரப்பப்பட்டு வருகின்றது. மேலும், அரங்கிற்கு வருகைத் தரும் பார்வையாளர்களுக்கு, அரங்கில் இடம் பெற்றுள்ளத் துறைகளின் சாதனைகள் குறித்த கையேடுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த கண்காட்சியில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் பேசியாதாவது,

"தமிழ்நாடு அரசின் சார்பில் பத்திரிகையாளர்களுக்கு தேசிய பத்திரிகையாளர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் பல்வேறுத் துறைகள் தங்களது தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தி வைத்துள்ளனர். தொழில் துறை, வேளாண்மைத்துறை, செய்தித் துறை சார்பில் மற்றும் 75வது சுதந்திரத் திருநாளை முன்னிட்டு விடுதலைப் போரில் தமிழகம் என்கிற புகைப்படக் கண்காட்சியில் விடுதலைப் போரில் தமிழ்நாட்டின் சார்பில் பங்கேற்ற தியாகிகளின் புகைப்படங்களும் அவர்களை குறித்த செய்திகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாட்டில் புதியத் தொழில் தொடங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படுகிறது. இதன் மூலம் தமிழ்நாடு பல்வேறு வகையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது எனத் தெரிவித்தார்".

இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கேற்கும் அனைத்து மாநிலங்களும், தங்களது மாநில நாள் விழாவினை சிறப்புடன் கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில் தமிழ்நாடு நாள் விழா இன்று (16.11.2021) பிரகதி மைதானத்தில் உள்ள "லால்சவுக்" அரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவினை, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ். விஜயன் அவர்கள், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. கணேச மூர்த்தி அவர்கள் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் திரு. பி. வில்சன் அவர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., உள்ளுறை ஆணையர் திரு. ஆசிஷ் சட்டர்ஜி, இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர்/துணைச் செயலாளர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மதுரை சமர் கலைக் குழுவின் தலைவர் திரு.வேல்முருகன் தலைமையிலான குழுவினரின் தமிழ்நாட்டில் புகழ்பெற்ற பறையாட்டம், பெரிய மேளம் முழக்கம் போன்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் டெல்லியில் வசிக்கும் தமிழர்கள் உட்பட, பல்வேறு மாநிலங்களைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

---------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**